ப.கை. 31.12.2021

<u>பெரம்பலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்</u>

<u>ந.க.எண். 4725 / அ1 / 2021 நாள். .12.2021</u>

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப் பணி – பணிவரன்முறை – தருமபுரி மாவட்டம் கலப்பம்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து மாவட்ட மாறுதல் மூலம் பெரம்பலூர் மாவட்டம் சத்திரமனை அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியயளராக பணிபுரியும் திருமதி.க.மஞ்சுளா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பாக.

பார்வை : தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் நி.மு.எண்.4600/அ1/2021 நாள்.03.12.2021

********

பெரம்பலூர் மாவட்டம், சத்திரமனை அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.க.மஞ்சுளா என்பார் இளநிலை உதவியாளர் பதவியில் தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் பணிவரன்முறை செய்த ஆணை நகல் மற்றும் கருத்துருக்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள்மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பணிப்பதிவேட்டினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பிவைக்குமாறு சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு : அசல் பணிப்பதிவேடு மற்றும்
பணிவரன்முறை செய்த ஆணை நகல்
மற்றும் அசல் சான்றிதழ்கள்.

22/12/2021

முதன்மைக் கல்வி அலுவலர்,
பெரம்பலூர்

22.12.21

பெறுநர்

தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி, சத்திரமனை,
பெரம்பலூர் மாவட்டம்.

நகல் – மாவட்டக் கல்வி அலுவலர், பெரம்பலூர்.

நகல் – கோப்பிற்கு.

## தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை – திரு. து. கணேஷ்மூர்த்தி, எம்.ஏ, பி.எட்,

நி.மு.எண். 4600 / அ1 / 2021 நாள். 03 . 12. 2021

பொருள் தமிழ்நாடு அமைச்சுப் பணி - பணிவரன்முறை – தருமபுரி மாவட்டம் கலப்பம்பாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து மாவட்ட மாறுதல் மூலம் பெரம்பலூர் மாவட்டம் சத்திரமனை அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.க.மஞ்சுளா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பாக

பார்வை 1 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களின் ந.க.எண் 45090/அ4/இ1/2014 நாள் 25.07.2014

2 தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலரின்(பொ) ந.க.எண் 3562/அ1/2014 நாள் 28.07.2014

3 அரசாணை எண் 101 பள்ளிக் கல்வி (வரவு செலவு) துறை நாள் 18.05.2018

4 பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் ந.க.எண் 4725/அ1/2021 நாள் 22.09.201

ஃஃஃ

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழுவால் 2013-2014-இல் நடத்தப்பட்ட தொகுதி IV தேர்வில் தேர்ச்சி பெற்று தேர்வாணையம் மூலம் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு நியமனம் செய்ய தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)ல் கண்ட தருமபுரி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி தருமபுரி மாவட்டம். தருமபுரி கல்வி மாவட்டம் கலப்பம்பாடி அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 30.07.2014 முற்பகல் பணிநியமனம் பெற்று மாவட்ட மாறுதல் மூலம் பெரம்பலூர் மாவட்டம் சத்திரமனை அரசு மேல்நிலைப்பள்ளியில் பணிபுரிந்து வரும் திருமதி. க. மஞ்சுளா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்திட கோரிய கருத்துருக்களை பார்வை 4 இல் கண்டவாறு பெரம்பலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அன்புடன் அனுப்பியுள்ளார்.

மேற்கண்ட கருத்துருவினை கூர்ந்தாய்வு செய்து, பார்வை (3)இல் கண்ட அரசாணையில் இளநிலை உதவியாளருக்கான நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், கலம் 2இல் கண்ட பணியாளருக்கு கலம் 4ல் கண்ட நாளில் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | **திருமதி. க. மஞ்சுளா**<br>இளநிலை உதவியாளர்<br>அரசு மேல்நிலைப் பள்ளி<br>சத்திரமனை, பெரம்பலூர் மாவட்டம் | 30.07.2014<br>முற்பகல் | 30.07.2014<br>முற்பகல் |

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2013 - 2014 ஆண்டுகளில் தொகுதி IV இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் **பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டுக் காலம் தகுதிக்காண் பருவ காலமாக நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.**

தகுதிகாண் பருவத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வினையும், இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினையும் (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும்.

பணிவரன்முறை செய்யப்பட்ட வி வரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியாளரின் சார்பாக பெறப்பட்ட பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை அனுப்பி வைத்திட சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு - பணிப்பதிவேடு அசல் 1 தொகுதி

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி

03.12.2021

பெறுதல்

திருமதி.க.மஞ்சுளா, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, சத்திரமனை, பெரம்பலூர் மாவட்டம் (தலைமையாசிரியர் மூலமாக)

நகல் -

1. முதன்மைக் கல்வி அலுவலர், பெரம்பலூர் மாவட்டம்
2. தலைமையாசிரியர் அரசு மேல்நிலைப்பள்ளி சத்திரமனை பெரம்பலூர், மாவட்டம்